# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.97/2021

2025 -ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr-III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 12.08.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. விஸ்வநாதன் (PW) | வயது | : | 52 /2025 |
| த/க பெயர் | : | திரு. பன்னீர்செல்வம் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) முதல்வர் கதிரவன் ராஜேந்திரன் என்பவருக்கு 20.09.2021 அன்று எழுதி கொடுத்த பவர் பத்திரத்தை ரத்து செய்யாமல் எனக்கு 23.02.2022 ல் பவர் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. முதல்வர் கதிரவன் ராஜேந்திரன் என்பவருக்கு 20.09.2021 அன்று எழுதி கொடுத்த பவர் பத்திரத்தை ரத்து எப்போது செய்தார் என்றால் 2021 ல் ரத்து செய்தார், தேதி மாதம் ஞாபகம் இல்லை.

2) எனக்கு பவர் எழுதி கொடுத்த பின்னர் தான் ராஜேந்திரனுக்கு எழுதி கொடுத்த பவர் பத்திரத்தை ரத்து செய்ததாக 28.12.2022 ல் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் சரிதான். ராஜேந்திரனுக்கு கொடுத்த பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்யாமல் எனக்கு கொடுத்த பொது அதிகாரம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

3) எனக்கு கொடுத்த பொது அதிகாரம் செல்லாது என்பதால் இந்த வழக்கினை நடத்துவதற்கு எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய விபரம் எனக்கு யார் சொன்னது என்றால் கதிரவனின் குடும்பத்தில் 25 வருடம் பழக்கம் என்பதல் அனைத்து விபரங்களும் எனக்கு தெரியும்.

4) பிரதிவாதி தாவா சொத்தில் இருந்து கொண்டு எங்களை உள்ளே வரவிடாமல் தடுப்பதால் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கதிரவன் 25 வருடமாக வெளிநாட்டில் உள்ளார் என்றால் சரிதான், இடையிடையே வந்து செல்வார். வாதி கதிரவன் 25 வருடமாக வெளிநாட்டில் இருந்து வரும் நிலையில் தாவா சொத்தில் வாதியின்

அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) வாதி 25 வருடமாக வெளிநாட்டில் இருந்து வரும் நிலையில் தாவா சொத்தை யார் பயிர் செய்து வருகிறார் என்றால நான்தான். இந்த விபரத்தை எனது வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தாவா சொத்தானது முதல்வர் கதிரவன் அனுபவத்திலும் எனது அனுபவத்திலும் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) வழக்கு தாக்கல் செய்த தேதியன்று தாவா சொத்தை நான்தான் சாகுபடி செய்தேன் என்றால் ஆமாம். கதிரவன் முகவர் என்ற முறையில் வழக்கு தாக்கல் செய்த போது நான் தான் சாகுபடி செய்து வந்தேனா என்றால் ஆமாம். தாவா சொத்து சம்மந்தமாக வாதி கதிரவனுக்கும், பிரதிவாதிக்கும் இடையே நடந்த பணப்பரிவர்த்தனை சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும்.

**பிரதிவாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.08.12 18:55:37 +0530

District Munsif
Mannargudi.